**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 14.11.2025

அசல் வழக்கு எண். 294/2010

வா.சா. 1– கலாவதி , க/பெ. தங்கவேல்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>**4** முதல் **6** வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

__உங்கள் பெயர் என்ன என்றால் கலாவதி ஆகும். உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள், உங்கள் கணவர் பெயர் என்னவென்றால் தங்கவேலு ஆகும். தங்கவேலு உயிருடன் இருக்கிறாரா என்றால் இறந்து விட்டார். நீங்கள் என்ன படித்து உள்ளீர்கள் என்றால் மூன்றாவது வரை படித்துள்ளேன் எனக்கு படிக்கத் தெரியாது. உங்கள் கணவர் என்ன தொழில் செய்தார் என்றால் எலக்ட்ரீசியன் தொழில் செய்து வந்தார். அவர் படித்துள்ளார் என்றால் அவர் படித்து இருந்தார் தனிப்பட்ட வகையில் எலக்ட்ரீசியன் வேலை செய்து வந்தார். உங்களுக்கு வழக்கு பற்றி தெரியுமா என்றால் என் கணவர் தான் பணம் கொடுத்தார். உங்கள் கணவர் என்ன வழக்கு தாக்கல் செய்தார் என்றால் பணம் வாங்கியவர் மீது வழக்கு தாக்கல் செய்தார். கொடுக்கல் வாங்கல் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியில்லை பணம் கொடுத்தார் மனை கொடுப்பதாக சொன்னார்கள் அதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். உங்கள் கணவர் யார் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் மறந்துவிட்டது. பாலசுந்தரம் என்பவர் அவருக்கு சொந்தமான மனையை கிரயம் கொடுப்பதாக வாக்குமூலத்தில் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். தற்பொழுது எங்கு வசிக்கிறீர்கள் என்றால் செங்கல்பட்டு, ஆலப்பாக்கம், சக்தி நகர் 14வது தெரு என்னுடைய மகன் வீட்டில் வசித்து வருகிறேன். 2008 ஆம் ஆண்டு எங்கு வசித்தீர்கள்

என்றால் செங்கல்பட்டில் டவுனில் வசித்தோம். நீங்கள் செங்கல்பட்டு தான் பொழிச்சலூர் என்கிற இடம் பற்றி உங்களுக்கு தெரியாது என்றால் என்னை ஒரு முறை அழைத்துச் சென்று என் கணவர் காட்டினார். இந்த இடத்தில் தான் மனை கொடுப்பதாக என்னிடம் அப்பொழுது அவர் என்னிடம் சொன்னார். உங்கள் கணவர் தங்கவேலு பொழிச்சலூர் சேர்ந்த திருநாவுக்கரசு என்பவரது நண்பர் என்றால் சரிதான். பொழிச்சலூர் சேர்ந்த திருநாவுக்கரசு உங்கள் வீட்டுக்கு பக்கத்தில் இருக்கிறார் என்றால் சரியில்லை. பாலசுந்தரம் என்பவர் திருநாவுக்கரசு என்பவரிடம் இந்த வழக்கு சொத்தினை கடந்த 2008ஆம் ஆண்டு அடமானம் வைத்திருந்தார் அந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி அடமானம் செய்த ஆவணத்தை நன்கு தெரிந்து கொண்டேன் பொய்யாக ஒரு விக்கிரைய உடன்படிக்கையை உங்கள் கணவர் ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரி இல்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்த விக்கிரைய உடன்படிக்கை பத்திரத்தில் உள்ள கையொப்பம் உங்களுடைய கணவர் கையொப்பம் என்றால் அது அவருடைய கையொப்பம் தெரியாது. மேற்படி உடன்படிக்கை பத்திரம் பதிவு செய்யப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பத்திரத்தில் முதல் பார்ட்டி, இரண்டாவது பார்ட்டி என்று குறிப்பிட்டு எழுதும் இடத்தில் தரப்பினர்கள் மாற்றி எழுதி உள்ளார்கள் என்றால் அது பற்றி தெரியாது. அந்த முதல் தரப்பினர் இரண்டாவது தரப்பினர் பற்றி உங்களுக்கு யார் என்று தெரியுமா என்றால் பத்மா, நரசிம்மர் என்று என்னுடைய கணவர் அடிக்கடி சொல்லுவார் ஒரு முறை நான் அங்கு சென்று அவர்களை பார்த்துள்ளேன். பத்மினி லட்சுமி திருமால், மோகன லட்சுமி ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியாது. உங்கள் கணவர் இந்த வழக்கினை 2010ஆண்டு தாக்கல் செய்தார் என்றால் சரிதான் . நீங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்யும்பொழுது பாலசுந்தரம்

இறந்து விட்டார் வழக்கு சொத்து விற்கப்பட்டுவிட்டது என்றால் சரியில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக அறிவிப்பு எதுவும் உங்கள் கணவர் கொடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. உங்கள் கணவர் தாக்கல் செய்த இந்த வழக்கு உங்களுக்கு பரிகாரம் வழுங்கத்தக்கது அல்ல என்றாலும் சரி இல்லை. பாலசுந்தரத்திற்கு உங்கள் கணவர் பணம் கொடுக்கவில்லை என்றால் சரியில்லை. சேல் அக்ரிமெண்ட் என்பது உங்கள் கணவரால் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியில்லை. வழக்கு சொத்தினை கிரயம் வாங்கியவர்களை எட்டு ஆண்டுகள் கழித்து தான் ஒரு தரப்பினராக நீங்கள் சேர்த்துள்ளீர்கள் என்றால் சரிதான். உங்கள் கணவருக்கும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தமில்லை. உங்கள் கணவர் பொய் வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram